تاميلي

தமிழ்

معهد السنة
As-Sunnah College

MahadSunnah

# شهر رجب

# ரஜப் மாதம்


ஆசிரியர்:

**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர்,

ம:.ஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.


*www.alsarhaan.com*

WWW.MAHADSUNNAH.COM

# ரஜப் மாதம்

**ரஜப் ஹிஜ்ரி ஆண்டின் ஏழாவது மாதமாகும். எல்லாம் வல்ல இறைவன் கூறிய புனித மாதங்களில் இதுவும் ஒன்று.**

**திருமறை கூறுகிறது:**

**(இறைவன் வானங்களையும் பூமியையும் படைத்த நாளில் மாதங்களின் எண்ணிக்கை பன்னிரண்டு மாதங்கள் ஆகும், அவற்றில் நான்கு புனிதமானவை...) (9:36)**

**இது நன்மை மற்றும் பரக்கத் நிறைந்த ஷஃபான் மற்றும் ரமலான் மாதங்களுக்கு திறவுகோலாகும்,**

**ரஜப் மாதம் இஸ்லாத்திற்கு முந்தைய காலத்தில் அரேபியர்களுக்கு மிகவும் புனிதமான மாதங்களில் ஒன்று.**

**இது “தர்ஜீப்” எனும் பதத்திலிருந்து ரஜப் எனும் பெயர்கொண்டு அழைக்கப்படுகிறது, தர்ஜீப் என்பது மகிமை எனும் கருத்தைக் கொண்டது.**

**அரேபியர்கள் மரியாதைக்காக இம்மாதத்தில் சண்டைகளை தவிர்த்தனர்**

அரேபியர்களிடையே ரஜப் மாதம் பதினான்குக்கும் மேற்பட்ட பெயர்களைக் கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். அவை வருமாறு:

- "அஸம்" செவிடு. ஆயுதங்களின் சத்தம் கேட்காததால் அப்படி அழைத்தனர்.
- "அஸப்" கொட்டக் கூடியது. ஏனென்றால் கருணை இம்மாதம் கொட்டுகிறது.
- "ஹரம்" தொன்மையானது. ஏனெனில் அதன் புனிதம் பழையது.
- "முகீம்" நிலையானது. ஏனெனில் அதன் மகிமை நிலைத்திருக்கும்.
  என்றும் குறிப்பிடுகின்றனர்.

ஒரு பொருளின் அதிக எண்ணிக்கையிலான பெயர்கள் அதன் மகிமையைக் எடுத்துக்காட்டுகிறது.

மேலும் இஸ்லாத்தில் ரஜப் மாதம் மற்ற புனித மாதங்களை விட அதிக மதிப்பும் சிறப்பும் கொண்டது. இருப்பினும், இம் மாதத்திற்கான விசேடமான வணக்க வழிபாடுகள் எதுவும் கிடையாது. அல்லாஹ்வின் தூதரிடமிருந்து இது பற்றிய ஆதாரப்பூர்வமான சான்றுகள் எதுவும் இடம்பெறவில்லை.

**இப்னு தைமிய்யா (ரஹ்) கூறினார்கள்:**

ரஜப் மாத நோன்பு, ரஜப் மாத சிறப்புகள் அல்லது அதில் நோன்பு நோட்பதின் சிறப்புகள், அல்லது விஷேட ரகாயிப் தொழுகை ஆகியவை சம்பந்தமாக வந்த சிறப்புகள் அனைத்தும் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் ஆகும்.

**இப்னுல் கய்யிம் (ரஹ்) கூறினார்கள்:**

ரஜபில் நோன்பு நோற்பதையும், சில இரவுகளில் தொழுவதையும் குறிப்பிடும் அனைத்து ஹதீஸும் இட்டுக்கட்டப்பட்ட பொய்யாகும். எனவே, ரகாயிப் தொழுகை, அல்ஃபிய்யா தொழுகை மற்றும் பிரத்தியேக நோன்புகள், அல்லது இருபத்தி ஏழாவது இரவு வழிபாடு, கொண்டாட்டம் ஆகியவற்றிலிருந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஆம், எதிர்வரும் ரமலானுக்கு தன்னை தயார்படுத்திக் கொள்கின்ற அடிப்படையில், இம்மாதத்தில் வழமையாக செய்யக்கூடிய வணக்கங்களில் நாம் கரிசனை செலுத்த வேண்டும். ஏனெனில் ரஜப் காற்றைப் போலவும், ஷஃபான் மேகங்களைப் போலவும், ரமலான் மழையைப் போலவும் உள்ளது.

ரஜபில் நடாதவர், ஷஃபானில் தண்ணீர் பாய்ச்சாதவர் ரமலானில் எப்படி அறுவடை செய்வார்?